

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி நகராட்சியில் புதிதாக அமைக்கப்பட்ட நவீன பேருந்து நிலையத்தை நகராட்சி வளர்ச்சி துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார் தொழில்துறை அமைச்சர் முனைவர் டி. ஆர்.பி.ராஜா,மாவட்ட ஆடசியர் மோகன சந்திரன், நகர மன்ற தலைவர் மன்னை சோழராஜன், நகர செயலாளர் வீரா.கணேசன், சட்டத் திருத்தக் குழு உறுப்பினர் பி. ராஜமாணிக்கம், மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலைமங்கலம் ஜி. பாலு,வார்த்தகார் சங்க தலைவர் ஆர்.வி.ஆனந்த் மற்றும் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பங்கேற்றனர்.

### கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் 6 வழித்தடங்களில் வழித்தட நீட்டிப்பு

# மாற்றியமைக்கப்பட்ட மகளிர் விடியல் பயண பேருந்து சேவை!

## மதியழகன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

கிருஷ்ணகிரி, அக்.15-

கிருஷ்ணகிரி ஒன்றியம் என்னேகொள்புதூர் கிராமத்தில் 30.58 லட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டிலான சிமெண்ட் சாலை அமைக்கும் பணி மற்றும் கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையத்தில் 6 வழித்தடங்களில் வழித்தட நீட்டிப்பு, மாற்றி அமைக்கப்பட்ட மகளிர் விடியல் பயண பேருந்து சேவைகளை மாவட்ட செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சித் தலைவர் தினேஷ் குமார், ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர். அதனை தொடர்ந்து பர்கூர் வட்டம் கொல்ரூர் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடையை திறந்து வைத்தனர்.

தமிழ்நாடு அரசு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றதிலிருந்து கடந்த நான்கு ஆண்டுகளில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரை., தருமபுரி மண்டலத்திற்குட்பட்ட கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 3 புதிய புறநகர் மற்றும் 5 நகர வழித்தடங்கள் என மொத்தம் 8 புதிய வழித்தடங்களும் மற்றும் 101 வழித்தட நீட்டிப்பு, வழித்தட மாற்றம் என மொத்தம் 109 வழித்தடங்களில் 121 பேருந்துகள் மூலம் 280 கிராம, நகரங்களில் இருந்து பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் பொதுமக்கள் என சுமார் 4,77,594 பேர் பேருந்து வசதி பெற்று பயனடைந்து வருகிறார்கள். மேலும் பழைய புறநகர் பேருந்துகளுக்குப் பதிலாக 55 புதிய பேருந்துகள், 39 புனரமைப்புப் பேருந்துகள் என மொத்தம் 94 பேருந்துகள் புதிய பொலிவுடனும், மகளிர் விடியல் பயணம் செய்யும் பழைய நகரப் பேருந்துகளுக்குப் பதிலாக 52 புதிய பேருந்துகள்,

15 புனரமைப்புப் பேருந்துகள் என மொத்தம் 67 பேருந்துகள் புதிய பொலிவுடன் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இயக்கப்பட்டு வருகிறது. கிருஷ்ணகிரி ஒன்றியம், என்னேக்கொள்புதூர் கிராமத்தில் 30.58 லட்சம் ரூபாய் திட்ட மதிப் பீட்டில் புதிய சிமெண்ட் சாலை மற்றும் பேவர் பிளாக் அமைக்கும் சாலைகளை துவக்கி வைத்து, பொதுமக்கள் நீண்டதூரம் சென்று நியாயவிலைப் பொருட்கள் வாங்குவதை தவிர்க்கும் பொருட்டு அவர்கள் வசிக்கும் பகுதிக்கு அருகிலேயே பெற்றுக்கொள்ள ஏதுவாக புதிய நியாய விலைக் கடைகள்,

பகுதிநேர மற்றும் முழுநேர நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. அதனடிப்படையில் அஞ்சூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க கட்டுப்பாட்டில் உள்ள நாய்கனூர் தாய்கடையிலிருந்து, கொல்ரூர் பகுதிநேர நியாய விலை கடை திறக்கப்பட்டுள்ளது. இதனால் 156 குடும்ப அட்டைதாரர்கள் தங்கள் பகுதிகளிலேயே குடிமைப் பொருள்கள் பெற்று பயனடைவார்கள்.

இந்நிகழ்ச்சியில் தொமுச பேரவை துணைத் தலைவர் பி.கிருஷ்ணன், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் அன்பரசன்,

மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி , சாவித்திரி கடலரசு மூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் பரிதாநவாப், சித்ரா சந்திரசேகர், செந்தில், பொதுக்குழு உறுப்பினர் நாகராசன், ஒன்றிய செயலாளர்கள் தனசேகரன், அறிஞர், நகர செயலாளர்கள் அஸ்லாம், வேல்மணி மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள்,

அரசு அலுவலர்கள் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நவ. 5, 6

# 2 நாட்கள் ஆட்சியர்கள், காவல் அதிகாரிகள் மாநாடு!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை,அக்.15-

வரும் நவம்பர் 5ம் தேதி மற்றும் 6ம் தேதிகளில் ஆட்சியர்கள், காவல்துறை அதிகாரிகள் மாநாடு நடக்கிறது.

நிர்வாகம், சட்டம் ஒழுங்கு, வளர்ச்சி பணிகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து இதில் விவாதிக்கப்பட உள்ளன.

2 நாட்கள் ஆட்சியர்கள், காவல் அதிகாரிகள் மாநாடு நடைபெறும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் வரும் நவம்பர் 5ம் தேதி மற்றும் 6ம் தேதிகளில் ஆட்சியர்கள், காவல்துறை அதிகாரிகள் மாநாடு கூடுகிறது.

இதில், நிர்வாகம், சட்டம் ஒழுங்கு, வளர்ச்சி பணிகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து இதில் விவாதிக்கப்பட உள்ளதாக கூறப்பட்டுள்ளது.

### இலண்டன் பொருளியல் பள்ளியில் படித்தபோது –

# அண்ணல் அம்பேத்கர் தங்கியிருந்த இல்லம்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பார்வையிட்டு – பெருமிதப் பதிவு!

இலண்டன், அக்.15-

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியின் எக்ஸ் தள பதிவு வருமாறு :

**பாபாசாகேப் அண்ணல் அம்பேத்கர் அவர்கள் லண்டன் பொருளியல் பள்ளியில் படித்த போது, தங்கியிருந்த இல்லத்தைப் பார்வையிட்டோம்.**

**இந்திய அரசியலமைப்பை உருவாக்க காத்திருந்த ஓர் இளைஞன் ஆகப்பெரும் ஆயுதமாக கல்வியைக் கருதி, தங்கி பயின்று கொண்டிருந்த இல்லத்தை மாணவருக்குரிய மனதோடு பார்வையிட்டதில் பெரும் மகிழ்ச்சி.**

இவ்வாறு அப்பதிவில் - அன்பில் மகேஸ் பொய்யாமொழி குறிப்பிட்டுள்ளார்.



கோவை மாவட்டம், மருதமலை சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் தொடக்க விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், கோவை மாநகர் மாவட்ட பொறுப்பாளர் துரை. செந்தமிழ்ச் செல்வன், வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் உள்பட கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, உடுமலை கிழக்கு ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் ரூபாய் 1 கோடியே 82 லட்சத்து 24 ஆயிரம் மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை திருப்பூர் தெற்கு மாவட்ட செயலாளர் திரு.இல.பத்மநாபன் முன்னிலையில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி துவக்கி வைத்தார். இதில் ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ்.கே.எம்.தங்கராஜ், கா.செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர் எம்.ஆர்.பாபு உள்பட மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்கள் இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில், ஈரோடு மாவட்டம், சென்னிமலை சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் பக்தர்களின் வசதிக்காக 6.70 கோடி ரூபாய் மதிப்பில் 4 கிலோமீட்டர் தூரத்திற்கு சீரமைக்கப்பட்ட தார்சாலை, பசுமடம் மற்றும் பக்தர்கள் காத்திருப்பு கூடம் ஆகியவற்றை காணொலி காட்சி வாயிலாக நேற்று முன்தினம் (13.10.2025) திறந்து வைத்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நாடாளுமன்ற உறுப்பினர் கே இ. பிரகாஷ் ஆகியோர் மலைப்பாதையில் பயணித்து பொதுமக்களுக்கு சாலையை அர்ப்பணித்தனர். இந்நிகழ்ச்சியில் சென்னிமலை வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ப செங்கோட்டையன், மேற்கு ஒன்றிய கழக செயலாளர் எஸ் ஆர் செல்வம், கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் சி.பிரபு, நகர செயலாளர் எஸ்.எம்.ராமசாமி, காயத்ரி இளங்கோ, கொடுமணல் கோபால், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சதீஷ் (எ) பொ சுப்பிரமணியன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



தஞ்சாவூர் மாநகராட்சி பழைய பேருந்து நிலையத்திலிருந்து 5 புதிய தாழ்தள சொகுசு பேருந்துகளையும், 3 வழித்தட நீட்டிப்பு செய்து இயக்கப்படும் பேருந்துகளையும் அமைச்சர் முனைவர் கோவி.செழியன் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, ச.முரசொலி எம்.பி., டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ., மேயர் சண்.இராமநாதன், து.செல்வம், துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி உள்ளிட்ட பலர் உடன் உள்ளனர்.

### கள்ளக்குறிச்சி – வாணாபுரம் – தென்பெண்ணை ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டு

# உயிரிழந்த சிறுவனின் குடும்பத்திற்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக்.15-

கள்ளக்குறிச்சி மாவட்டம், வாணாபுரம் வட்டம், தென்பெண்ணை ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கிட முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் அறிக்கை வருமாறு:-

விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூர் வட்டம், திருவெண்ணெய்நல்லூர் நகரத்தைச் சேர்ந்த செந்தில் என்பவரின் மகன் செல்வன்.எத்திராஜ் (வயது 16) என்ற சிறுவன் 11.10.2025 அன்று கள்ளக்குறிச்சி மாவட்டம், கூவனூர் கிராமத்திலுள்ள தனது உறவினர் வீட்டிற்கு சென்றுவிட்டு வாணாபுரம் வட்டம், திருவரங்கம் அரங்கநாதர் கோவிலுக்கு அருகிலுள்ள தென்பெண்ணை ஆற்றில் தனது நண்பர்களுடன் குளித்துக் கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக ஆற்றில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் 12.10.2025 அன்று திருக்கோவிலூர் வட்டம், ஆவியூர் கிராமத்தில் மேற்படி சிறுவனின் உடல் இறந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டது என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

### நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகை - கூடலூர் - குன்னூர்

# சட்டமன்றத் தொகுதி கழக வாக்குச் சாவடி நிலை முகவர்கள் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜூ வேண்டுகோள்!



நீலகிரி, அக். 15 -

நீலகிரி மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே. எம்.ராஜூ விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகை - கூடலூர் -குன்னூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட தி.மு.க. வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA-2) கூட்டம், இன்று (15.10.2025 - புதன் கிழமை) காலை 10.30 மணியளவில் உதகை ஒக்கலிகர் திருமண மண்டபத்தில் எனது மாவட்டக் கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜூ தலைமையில், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் பா.மு.முபாரக், கழக தேர்தல் பணி செயலாளர் - அரசு கொறடா கா. ராமச்சந்திரன் மற்றும் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் தென்றல் செல்வராஜ் (உதகை), ஆர்.பி. பரமேஸ்குமார் (கூடலூர்), அ.திராவிடமணி (குன்னூர்) ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில், மேற்கு மண்டலப் பொறுப்பாளர் - முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி மற்றும் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் வழக்கறிஞர் கே.எம்.தண்டபாணி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

எனவே, அந்தந்த நகர, ஒன்றிய, பேரூர்ச் செயலாளர்களால் நியமிக்கப்பட்டுள்ள கழக வாக்குச் சாவடி நிலை முகவர்கள் (BLA-2) அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இதில் மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர்க் கழகச் செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



முதலமைச்சர் கோப்பைக்கான மாநில அளவிலான சிலம்பம் போட்டி தமிழ்நாடு உடற்கல்விகள் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம் சென்னை மேல கோட்டையூரில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் வெற்றி பெற்றவர்களையும் கலந்து கொண்டவர்களையும் மற்றும் பயிற்சியாளர் ஆர்.சரவணனையும், தஞ்சை மத்திய மாவட்ட செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., தஞ்சை கலைஞர் அறிவாயத்திற்கு அழைத்து பாராட்டி வாழ்த்துக்கள் தெரிவித்தார். உடன் மேயர் சண்.இராமநாதன், கே.எம்.கௌதமன், செல்வகுமார், எஸ்.நாகராஜன் ஆகியோர் உடன் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம் கைத்தறி துறை சார்பாக கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு மிகை ஊதியம் மற்றும் பங்கு ஈவுத்தொகை வழங்கும் விழாவில் அமைச்சர் சு. முத்துசாமி தலைமையில் கே.இ. பிரகாஷ் எம்.பி., வி.சி.சந்திரகுமார் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு கைத்தறி நெசவாளர்களுக்கு உதவித் தொகை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் கைத்தறி நெசவாளர்கள், துறை சார்ந்த அரசு அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.